Registerd as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 2 | [16-06-98] | புதன் கிழமை | ஓசை 118

X-M-C-A

## மட்டக்களப்பு நகரில் நள்ளிரவில் சுற்றி வளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் ஒருபகுதி கிராமங்களை நள்ளிரவுவேளை திடீரெனச் சுற்றிவளைத்த பொலிஸார் வீடு வீடாகச் சோதனையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் நகரின் ஒருபகுதியை சுற்றிவளைத்த பொலிஸார் வீடுகளில் உள்ளோரைத் தட்டியெழுப்பி அவர்களின் அடையாள அட்டைகளைச் சோதனையிட்டனர். பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ததற்கு மேலதிகமாக எவரும் வீடுகளில் தங்கியிருக்கின்றனரா என்றே பொலிஸார் சோதனை நடத்தியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பொலிஸ் கைதிகளின் உண்ணாவிரதம்
# அரசால் திட்டமிட்டு இருட்டடிப்பு

### அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று கொழும்பிற்குப் பயணமானார்.

நேற்றுமாலை பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கொழும்புநோக்கிப் புறப்பட்ட "குமாரி" கப்பலிலேயே இவர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இக் கப்பலில் யாழ். பிரதான தபாலகத்தில் இருந்து சுமார் 35 உள்ளூர் மற்றும் வெளியூர்த் தபாற் பொதிகள் எடுத்துச்செல்லப்படுவதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (சி)

## காரணத்தை திரிபுபடுத்தவும் முயற்சி

(கொழும்பு)

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிங்களப் பொலிசார் குறித்த செய்திகளை சிறிலங்கா அரசாங்கமும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்களும் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்து வருகின்றன. கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்து மூன்று நாட்கள் முடிவுற்ற நிலையிலும், அரசாங்கம் இது குறித்து மௌனம் சாதித்து வருவதுடன் இவ் உண்ணாவிரதம் குறித்த செய்திகளைத் திரிபுபடுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

யுத்தக்கைதிகளான 38 பொலிசாரும், ஓர் இராணுவ சிப்பாயும் சாகுமவரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கத்திற்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தனர். உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் உண்ணாவிரதம் ஆரம்பமாகி மூன்று நாட்கள் ஆகியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்கள் இது குறித்து மௌனம் சாதித்து வருகின்றன. இதேவேளை உண்ணாவிரதம் குறித்து திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை தமது கைக்கூலிகள் மூலம் வெளியிட்டு அதனை உலகில் பிரசாரப்படுத்துவதன் மூலம் கவனத்தை திசை திருப்பப் பார்க்கின்றது.

இந்த வரிசையில் ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவாநந்தாமூலம் அரசாங்கம் தனது முதல் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இதன் விளைவே டக்கிளஸ் தேவானந்தா தெரிவித்ததாக ராய்டர் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளசெய்தியாகும். அச்செய்தியில்; சிறிலங்கா அரசின் மேல் அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் புலிகளின் கட்டாயத்தின் பேரில்; புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக டக்லஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் யுத்த கைதிகளின் நெருங்கிய உறவினர்கள் யாழ்ப்பாணம் மேற்கொள்ளும் விஜயம் பிரசார நோக்கத்துக்காக விடுதலைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நடக்கக்கூடிய சக்திகூட நாம் இழந்து விட்டோம்

### பொலிஸ் உண்ணா விரதிகள் தெரிவிப்பு

"மூன்றாம் நாளாக சாகும் வரையிலான உண்ணா விரதம் இருக்கும் எமது உடல் நிலை பலவீனமாக உள்ளது. மேலும் எம் உண்ணாவிரதம்தொடர்ந்தால் எமது உடல்நிலை மேலும் மோசமாகும் நடக்கக் கூட சக்தியில்லை. நடக்கும்

வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளின் நிலை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "உண்ணாவிரதம் இருக்கும் மற்றவர்களின் நிலையும்

மோசமாக உள்ளது" என்றும் அவர் கூறினார்.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் இரு தினங்களில் எழும்புவதே கஷ்டமாக இருக்கும் என்றும் 18ஆம் திகதி எம்பெற்றோர் இங்கு வரமுன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் அம்பாறையில் தமிழர் சடலம் முஸ்லிம்கள் வெட்டினர்?

அம்பாறை தாண்டியடிப் பகுதியில் இரு தமிழர்களின் சடலங்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. இவர்கள் முஸ்லிம்களால் வெட்டிக்கொல்லப்பட்டிருக்கலாம் என இப் பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

## பிரேமாவின் பாவனையில் 22 அரச வாகனங்கள்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சியில் இருந்தபோது அரசுக்கு சொந்தமான 22 கார்கள் அவரின் சொந்தப்பாவனைக்கென பயன்படுத்தப்பட்டு வந்துளள தாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 17 கார்களுடன் அவற்றைபராமரிக்கும் வேலையாட்களும் நேற்று திருமதி ஹேமா பிரேமதாசாவிடமிருந்து சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## வட-கிழக்கு யுத்தத்தால் முழுநாட்டுக்கும் பாதிப்பு

### காமினி திசநாயக்கா தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தம் முழு நாட்டையுமே பாதிக்கிறது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்துருவையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்குக் கிழக்கில் கடந்த பல

தால் இந்த நாட்டை ஒரு போதுமே திருத்தி அமைக்க முடியாது போய் விடும்.

மாகாண சபை உறுப்பினர் ரைட்டர் திலகசேகரா ஒரு போதும் ஐக்கிய தேசிய கட்சியில் சேரமாட்டார். நாம் எவருமே ஐ. தே. க' யில் சேர வேண்டிய அவசியமில்லை பொது மக்கள் இன்று எமது கொள்கைகளை சரி என ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் குற்றவியல் மசோ

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் வலிகாமம் மேற்கு கரையோரப் பகுதிகளையும், மக்கள் குடியிருப்புக்களையும் நோட்டம் இட்டுச் சென்றது.

இவ் விமானம் சுழிபுரம், பொன்னாலை, அராலி பகுதிகளையடுத்த கரையோரப் பகுதிகளையும், சங்கானை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை தொல்புரம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களையும் சுமார் ஒன்றரை மணிநேரம் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

[41]

## பரீட்சை முடிவுகள்

யாழ். போதனாமருத்துவமனையின் தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப்பிரிவில் சுமார் 36 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களில் சுமார் 27 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தவர்களில் அனேகர் யாழ். போதனா மருத்துவ மனையில் தாதிகளாக நியமிக்கப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சியில் இருந்தபோது அரசுக்கு சொந்தமான 22 கார்கள் அவரின் சொந்தப்பாவனைக்கென பயன்படுத்தப்பட்டு வந்துளள தாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 17 கார்களுடன் அவற்றைபராமரிக்கும் வேலையாட்களும் நேற்று திருமதி ஹேமா பிரேமதாசாவிடமிருந்து சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## வட-கிழக்கு யுத்தத்தால் முழுநாட்டுக்கும் பாதிப்பு

### காமினி திசநாயக்கா தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தம் முழு நாட்டையுமே பாதிக்கிறது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்துருவையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்குக் கிழக்கில் கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் யுத்தத்தால் முழுநாடுமே பாதிக்கப்படுவதுடன் சகல அரசியல் கட்சிகளையும் பாதிக்கின்றது, இந்நிலை தொடர்ந்து நீடித்தால் இந்த நாட்டை ஒரு போதுமே திருத்தி அமைக்க முடியாது போய் விடும்.

மாகாண சபை உறுப்பினர் ரைட்டர் திலகசேகரா ஒரு போதும் ஐக்கிய தேசிய கட்சியில் சேரமாட்டார். நாம் எவருமே ஐ. தே. க' யில் சேர வேண்டிய அவசியமில்லை பொது மக்கள் இன்று எமது கொள்கைகளை சரி என ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் குற்றவியல் மசோதாவில் நாம் சுமத்திய குற்றச்சாட்டுகள் இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டன உற்சவங்கள், கூத்து, கேளிக்கைகளை எல்லாம் இன்றைய ஜனாதிபதி நிறுத்திவிட்டார் என்றார்.

பொலிசாரும், ஓர் இராணுவ சிப்பாயும் சாகுமவரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கத்திற்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தனர்.

பட்ட பின்னரும் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் உண்ணா விரதம் ஆரம்பமாகி மூன்று நாட்கள் ஆகியும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் குறித்து மௌனம் சாதித்து வருகின்றன. இதே வேளை உண்ணாவிரதம் குறித்து திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை தமது கைக்கூலிகள் மூலம் வெளியிட்டு அதனை மூலம் அவனத்தை திசை திருப்பப் பார்க்கின்றது.

இந்த வரிசையில் ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவாநந்தாமூலம்அரசாங்கம் தனது முதல் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இதன் விளைவே டக்கிளஸ் தேவானந்தா தெரிவித்ததாக ராய்டர் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளசெய்தியாகும். அச்செய்தியில்; சிறிலங்கா அரசின் மேல் அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் புலிகளின் கட்டாயத்தின் பேரில்; புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக டக்லஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் யுத்த கைதிகளின் நெருங்கிய உறவினர்கள் யாழ்ப்பாணம் மேற்கொள்ளும் விஜயம் பிரசார நோக்கத்துக்காக விடுதலைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

பொன்னாலை, அராலி பகுதிகளையடுத்த கரையோரப் பகுதிகளையும், சங்கானை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை தொல்புரம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களையும் சுமார் ஒன்றரை மணிநேரம் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

[41]

## பரீட்சை முடிவுகள்

யாழ். போதனாமருத்துவ மனையின் தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப்பிரிவில் சுமார் 36 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களில் சுமார் 27 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தவர்களில் அனேகர் யாழ். போதனா மருத்துவ மனையில் தாதிகளாக நியமிக்கப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

# நடக்கக்கூடிய சக்திகூட நாம் இழந்து விட்டோம்

## பொலிஸ் உண்ணா விரதிகள் தெரிவிப்பு

''மூன்றாம் நாளாக சாகும் வரையிலான உண்ணா விரதம் இருக்கும் எமது உடல் நிலை பலவீனமாக உள்ளது. மேலும் எம் உண்ணாவிரதம்தொடர்ந்தால் எமது உடல் நிலை மேலும் மோசமாகும் நடக்கக் கூட சக்தியில்லை. நடக்கும் போது காற்றில் நடப்பது போல் உள்ளது'' இவ்வாறு தற்போது உண்ணாவிரதம் இருக்கும் சிறிலங்கா பொலிசார்களில் ஒருவரான பி. எஸ். பண்டாரா 'புலிகளின் குரல்' வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளின் நிலை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ''உண்ணாவிரதம் இருக்கும் மற்றவர்களின் நிலையும் மோசமாக உள்ளது உண்ணாவிரதம் ஆரம்பிக்கமுன் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தோம். தற்போது வயிற்றோட்டம் உள்ளது இதனால் இப்போது எம் உடல் நிலை மோசமாக உள்ளது'' என்றும் அவர் கூறினார்.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் இரு தினங்களில் எழும்புவதே கஷ்டமாக இருக்கும் என்றும் 18ஆம் திகதி எம்பெற்றோர் இங்கு வரமுன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதிகள் குடும்பத்துடன் அரசிற்கு சீரான தொடர்பில்லை

## தொண்டர் ஸ்தாபனங்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரமிருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்களுக்கும் அரசுக்குமிடையே தொடர்புகள் சீராக இல்லை. இவ் உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களது துயரங்களைப் போக்குவதற்கு அரசு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்ளது.

இந்த யுத்தக் கைதிகளது பெற்றோரும், உறவினர்களும் மிகவும் வறுமையானநிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும் அரசுக்கும் இடையே கடந்த மூன்று வருடங்களாக நெருங்கிய தொடர்புகள் எதுவும்நிலவவில்லை. இந்தநிலையை அரசு தனக்குசாதகமாகப் பயன்படுத்தி இக் கைதிகளை விடுவிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் கடத்தி வந்துள்ளது என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமை குறித்து கொழும்பில்இயங்கும் தொண்டர் ஸ்தாபனங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

### பொலிஸாரின் பெற்றோரிடம்

## உண்ணாவிரதத்தை கைவிட கோருமாறு வேண்டுகோள்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாகவுள்ள 38 பொலிஸ் மற்றும் ஓர் ராணுவ சிப்பாய் ஆரம்பித்துள்ள சாகும்வரை உண்ணா விரதப்போராட்டத்தை கைவிடுமாறு கோரும்படி அக் கைதிகளின் பெற்றோரிடம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வோல்டர் பர்னான்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக் கைதிகளின் விடுதலைக்கு எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்கமுடியுமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எனவே யுத்தக்கைதிகளும் அவர்களது உறவினர்களும் அவசரப்பட்டு நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் ''பயங்கரவாதி" களிடம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து அவர்களின் மனதை மாற்றமுடியாதுஎன்பதைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உண்ணாவிரதம் இருப்பவர்களுக்குத் தெரிவித்திருப்தாகவும் அவர் தெரிவித்தார்.

கைதிகளின் உறவினர்களில் ஒருவரான கமலினி குமாரி என்பவருக்கு எழுதியகடிதம் ஒன்றிலேயே வோல்டர் பர்னான்டோ இவ் விபரங்களை தெரிவித்துள்ளார்.

# எழுதுமட்டுவாளில் 'புக்காரா' அதிகாலையில் அனர்த்தம்

## பதுங்குகுழி 9 பேரை காத்தது!

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படையின் இரு 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை எழுதுமட்டுவாள் பகுதியில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலையும் 50 கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. இப்பகுதியில் சுமார் அரைமணிநேரம் இரு விமானங்களும் அனர்த்தம் புரிந்தன. இத்தாக்குதலில் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் தாக்குதலுக்குள்ளான பகுதியில் பாரிய குழிகளும் உடைமைச்சேதங்களும்ஏற்பட்டுள்ளன. பதுங்குகுழிக்குள் இருந்த குடும்பம் ஒன்று மயிரிழையில் உயிர் பிழைத்தது.

நேற்றுக்காலை 6.10 மணிக்கு எழுதுமட்டுவாள் பகுதிக்கு திடீரென வந்த இரு புக்காரா விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தன. இடையிடையே கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. எழுதுமட்டுவாள் அ. த. க. பாடசாலை வீதியில் உள்ள வல்வெட்டியில் இருந்து இடம் பெயர்ந்தவரான திருமதி ஆனந்தராசா என்பவரது வீட்டின் முற்றத்தில் முதலாவது குண்டு வீசப்பட்டது. எனினும் வீடு சேதம் அடையவில்லை. அவ்விடத்தில் நின்ற தென்னைகளும் சிறிய மாதா கோயில் கொட்டகையும் முற்றாக சேதமடைந்தன.

அடுத்த குண்டு அவரது வீட்டிற்கு பின்னால் உள்ள தென்னங்காணியில் வீசப்பட்டதில் அங்கு பாரிய குழிகள் ஏற்பட்டது. தொடர்ந்து மூன்றாம் தடவையும் நான்காவது தடவையும் வீசப்பட்ட குண்டுகள் இவரது வீட்டிற்கு அருகிலுள்ள தென்னங்காணிகளிலேயே வீழ்ந்து வெடித்து பெரும் குழிகளை ஏற்படுத்தியது.

ஐந்தாவது முறையாக புக்காரா விமானம் வீசிய குண்டு எழுதுமட்டுவாள் சந்தியில் இருந்து பிரதான வீதியின் 100யாருக்கு அப்பால் புகையிரதப் பாதையில் வீழ்ந்து வெடித்தது. குண்டு வீழ்ந்த இடத்தில் சுமார் 20அடி நீளமும், 15அடி ஆழமும் கொண்ட பாரிய குழி ஏற்பட்டது குழியிலிருந்து நீர் ஊற்றெடுத்த வண்ணமிருந்தது.

ஆறாவது குண்டு பழைய எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள த. தபசீலன் என்பவரது வீட்டு முற்றத்தில் வீழ்ந்தது. இங்கும் பெரும் குழி ஏற்பட்டது. குழியில் இருநது வீசப்பட்ட மண் அருகிலிருந்த கிணற்றை மூடிவிட்டது. இதேவேளை தாக்குதல் நடைபெற்ற பகுதிக்கு அருகில் பதுங்குகுழிக்குள் இருந்த 9பேர் மயிரிழையில் தப்பினர். பிரதான வீதி வெடித்த நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெளியில் வந்து பார்த்தோம் மாதாகோவிலைக் காணோம்!

(தென்மராட்சி)

''மாதா கோவிலில் நின்ற நாங்கள் விமானங்கள் கடுமையாக இரைந்ததும் பதுங்கு குழிக்குள் சென்றோம். குண்டு வீச்சு முடிந்து வெளியே வந்த போது மாதா கோவில் முற்றாகச் சேதமடைந்திருந்தது'' இவ்வாறு நேற்று எழுமட்டுவாளில் புக்காரா விமானங்கள் நடத்திய தாக்குதலின் போது மயிரிழையில் தப்பிய திருமதி ஆனந்தராசா கண்ணிகா எமது தென்மராட்சி செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

''காலை 6-10மணியிருக்கும் இரு குண்டு வீச்சு விமானங்கள் பேரிரைச்சலுடன் பலாலிப் பக்கமாக இருந்துவந்தன. அவ்வேளையில் தான் நாம் நித்திரைவிட்டு எழுந்திருந்தோம். விமானங்கள் எமது பகுதியை நோக்கி வட்டமிட்டன. எமது குடும்பத்தினரும் அயலவர்களுமாக எமது வீட்டின் முன்னால் உள்ள மாதா கோவிலினுள் சென்றோம். விமானங்களின் இரைச்சல் வரவர அதிகமானதை அடுத்து மறுகணமே நாம் அருகிலுள்ள பதுங்கு குழியினுள் நுழைந்து கொண்டு விட்டோம். அடுத்த கணமே

(4ஆம் பக்கம் பார்க்க)

## உறவினர் குழு வருகை இராணுவம் ஊர்ஜிதம்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக இருக்கும் 39 பேரினதும் உறவினர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதை சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

இவர்கள் திருக்கோணமலையிலிருந்து வியாழனன்று விசேட கப்பல் மூலம் புறப்பட்டு வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வந்தடைவர் எனவும், இக் குழுவில் சுமார் 80 பேர் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ பொது கல்வித்தேர்வு திங்கள் விண்ணப்ப முடிவு

தமிழீழ பொதுக் கல்வித் தேர்விற்கான விண்ணப்பங்களை கோட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் திங்கட்கிழமை தரவுநிரற்படுத்தும் பணிப்பாளரிடம் ஒப்படைக்கும்படியும் இரண்டாம் தடவையாக தேர்வில் தோற்றுவோர் அவ்வப் பாடசாலை மூலம் விண்ணப்பிக்கலாமெனவும், ஆங்கில இலக்கியம் படிக்கும் மாணவர்கள் ஆங்கில இலக்கியத்திற்கு (English Literature) விண்ணப்பிக்கலாமெனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவிக்க நல்ல நிலையில் உள்ள National Rx5030 National Rx1822 Mini two in One Set, Mw Sw Fm) Sansui Integrated Amplifier. ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்ற CITIZEN SEIKO ஒட்டோ மெற்றிக் கைகடிகாரங்கள் மிககுறைந்த விலையில் தரமானவையாக பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6838)

### கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி சரமகவிக்குத் தேவையான (Blocks) பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்கு தேவையான புகைப்படங்கள், உறுதியான நபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப்படும் போது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள் கொழும்பு ஸ்ரூடியோ 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6747)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிககூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6733)


### தச்சுத் தொழிலாளருக்கு நிவாரணம்

யாழ். மாவட்டத்திலுள்ள தச்சுத் தொழிலாளர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை யாழ் மாவட்டத்தச்சுத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெறுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் ஆயிரக்கணக்கான தச்சுத்தொழிலாளர்கள் தொழிலின்றிப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பது தெரிந்ததே. [42]

### இல்ல மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

**ஜம்புலிங்கம் (ஜான்)**

[துரைலிங்கம் அலெஸ்ரீன்]

வீரப்பிறப்பு: 19-03-1973 வீரச்சாவு: 16-06-1990

அன்புச் செல்வமே!
நீ எம்மை விட்டு பிரிந்து மூன்று ஆண்டுகள் என்ன?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.

இன்றைய தினம் (16-06-93) இந்நினைவால் எம தில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் சகபோராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினா அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித அந்தோனியார் வீதி, பருத்தித்துறை (சி-6837) பெற்றோர், சகோதரர்கள்.

## ஈராண்டு நினைவில்




## நினைவு கூருகின்றோம் ...

## 1993-06-16

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மயிலிட்டியைச் சேர்ந்த 3 வயதுப் பெண் குழந்தை, மற்றும் இடைக்காடு மகாவித்தியாலய மாணவன்

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

ஜெறோம் (செல்லத்துரை மாணிக்கவாசன் - பெரியகுளம் வீதி, நெடுங்கேணி - மணலாறு)
ராசகிளி (கௌசிகன் வில்வன் - நெடுங்கேணி வீதி, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)
கப்டன் வினோத் (சின்னத்தம்பி விக்கினேஸ்வரன்- கிராஞ்சி - பூநகரி)
லெப். ஜமால் (சோமசுந்தரம் தர்மராசா - 133, ஸ்கந்தபுரம், புதுமுறிப்பு - கிளிநொச்சி)
ரகு (அருணாசலன் மகேந்திரன் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)
பசுமின் (மாடசாமி பாலசுப்பிரமணியம் -3-ம்வாய்க்கால் - கிளிநொச்சி)
ஹாசிம் (சுப்பையா பாஸ்கரன்-பாரதிபுரம்- கிளிநொச்சி)
சிறி (கனகசுந்தரம் ஆனந்தராசா - இரத்தினம் பண்ணை உருத்திரபுரம் - கிளிநொச்சி)
ஜமுனன் (கந்தசாமி இரத்தினகுமார் - இல 41ஏ, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
செந்தூரன் (பாலசுந்தரம் முத்துவாசன் - இல 11, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
குணா (நடராசா இராசவேந்திரன் - 6-ம் பிரிவு, இராமநாதபுரம் - கிளிநொச்சி)
சுஜத் (நடராசா குமரகுருநாதன் – குரும்பசிட்டி புலோலி, பருத்தித்துறை - யாழ். )
விமலன் (காத்தான் ஐங்கரன் செல்வானந்தராஜா - சிறுப்பிட்டி தெற்கு - நீர்வேலி)
மஜீத் (இராசு ரமேஸ் - 12/14, கெனடி வீதி, நாவாந்துறை - யாழ் )
ஜான்/அனஸ்ரன் (துரைலிங்கம் ஜம்புலிங்கம்- 4-ம் குறுக்குத்தெரு, அந்தோனியார் வீதி, பருத்தித்துறை - யாழ். )

யாழ் - காங்கேசன்துறை - ஹார்வியூ விடுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

மேஜர் விவேகன் (வல்லிபுரம் ரமேசன் - தெணியம்பை, வல்வெட்டித்துறை- யாழ். )
கப்டன் ஆன்சார் (கனகரத்தினம் சுரேந்திரன் - வியாங்கொடை, தெல்லிப்பழை கிழக்கு - யாழ். )
2-ம் லெப். ஸ்ராலின் (பாலசுந்தரம் உதயகுமார்- கப்பலுடையவர்வளவு கோயிலடி, வல்வெட்டித்துறை- யாழ்)
கரன் [மயில்வாகனம் உதயகுமார் - வேந்தனை, மாவிட்டபுரம் - யாழ். ]
தவா [பாவேல் ஜெயராஜ் - இல 57, 4-ம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை - யாழ் ]

யாழ் - பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

வெற்றி (இரத்தினம் அருள்மோகன் - மாவைக்கலட்டி, தெல்லிப்பழை - யாழ். )

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

ஜெயராஜ் [மகேந்திரம் ஜெயந்திரராஜா-மயிலியதனை - வல்வெட்டித்துறை - யாழ். ]

மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

இராமன் [மாப்பிள்ளை லெப்பைஅல்வின் - இறக்காமம் - அம்பாறை]
லெப். லக்கி (-அட்டைப்பள்ளம்-அம்பாறை)
கப்டன் ஆனந்த் (தங்கையா சுரேஸ்குமார் – இரு


## ஆறாம் மாத நினைவு கூரல்



மண்ணில் 24 — 06 — 1978

விண்ணில் 16 — 12 — 1992

கடற்புலி **லெப். கலியுகன்**

(சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார்)

சின்னவயதினில் சிறப்போடு புகழ் எடுத்தாய்
சிவந்தமண் காக்க எண்ணி சீரொடு தவம் வளர்த்தாய்
சரியவில்லை உன்வாழ்வு சரித்திரம் நீ
சந்ததிகள் தாம் வாழ தன்உயிரைத் தந்தாய் நீ
சச்சிதானந்தத்தின் தவப்பெரும் புதல்வன் நீ

உறங்காத கடல் அலையில் உதிரத்தை நனைத்தாய்நீ
உறங்காது கண்விழித்து ஊராரைக் காத்தாய் நீ
கலங்கரை விளக்கமான காவிய நாயகன் நீ
கருத்தொடு களம்சென்ற கண்ணான கடற்புலி நீ

விடிவொன்று எமைத்தேடும் வீரத்தின் திருமகன் நீ
"கடலில் களம்பல கண்ட கலியுக வீரனே!"
காலங்கள் கடந்தாலும் உன் நினைவு தமிழீழம்
நாம் காண்போம் தமிழீழம்.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய ஆறு வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்

உன் பிரிவால் துயருறும்

அச்சுவேலி வடக்கு, வல்வை றோட். (5148)

பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள், (பாடசாலை ஊழியர்கள், மாணவர்கள் அச்சுவேலி மகா. வி. )

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 05 — 1905

மறைவு: 26 — 06 — 1992

நிவாரணம்

யாழ். மாவட்டத்திலுள்ள தச்சுத் தொழிலாளர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை யாழ் மாவட்டத் தச்சுத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெறுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் ஆயிரக்கணக்கான தச்சுத்தொழிலாளர்கள் தொழிலின்றிப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பது தெரிந்ததே. [42]

## இல்ல மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் சம்பந்தர் இல்லம் (பச்சை) 320புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. அப்பர் இல்லம் (மஞ்சள்) 318 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சுந்தரர் இல்லம் (நீலம்) 251புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இவ்விளையாட்டுப் போட்டிகள் மாலிசந்தி விநாயகராலய முன்றலில் அதிபர் திரு செ செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வி. சே. ஏகாம்பரநாதன் மங்களவிளக்கேற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். வ மராட்சி கோட்ட ப்ரதிக்கல்விப் பணிப்பாளர் திரு ச. செலத்துரை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (25)

★

ஆரம்ப பாடசாலைகளான யா/புங்குடுதீவு மேற்கு அமெரிக்க மிஷன் வித்தியாலயம், யாழ் செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் என்பன இணைந்து 5 6 93 சனிக்கிழமை நடாத்திய மேற்படி போட்டியில் பச்சை இல்லம் 185புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் சிவப்பு இல்லம் 142புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், 115புள்ளிகளைப் பெற்று மஞ்சள் இல்லம் 3-ம்இடத்தையும் பெற்றன. வெற்றி பெற்ற பச்சை இல்லத்திற்கு பிரதம விருந்தினர் திரு நா சுந்தரலிங்கம்(உதவிகல்விப் பணிப்பாளர்வேலணைக் கல்விக்கோட்டம்)அவர்கள் யாழ்வர்த்தகர் திரு சு. செல்வராசா அவர்களால் உபகரிக்கப்பட்டஅமரர் திருமதி சுப்பிரமணியம் பூரணம் அவர்களின் நினைவு வெற்றிக் கேடயத்தை வழங்கிப் பாராட்டினார்.

---

...வேண்டுகிறோம்.

புனித அந்தோனியார் வீதி,
பருத்தித்துறை (சி-6837)

பெற்றோர்,
சகோதரர்கள்.

## ஈராண்டு நினைவில்



## லெப். கபில் (சசிகரன்)

வீரப்பிறப்பு: 1970-01-14

வீரச்சாவு: 1991-06-16

புன்னகை பூத்த முகத்தினன்
புயலாய் எழுந்த புலியிவன்
தன்னையே மண்ணிற்காய் தந்தவன்
தமிழீழமே தாகமாய் கொண்டவன்

முந்தைய தமிழீழ ஆட்சியை
மீட்கவே போர்க்களம் சென்றவன்
சொந்தமண் காத்திட 'கபிலிவன்'
அந்த மண்ணிற்கே விதையவன்

ஏங்கிய விழிகளில் நீரைச்
சொரிகின்றோம எம் உடன்பிறப்பே - நீ
தாங்கிய கனவினை சுமந்து
வாழ்கிறோம் இம் மண்ணிலே மைந்தனே!

16-6-93 இன்று இரண்டாம் ஆண்டின் நினைவு நாளில் சகல போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (5159)

சி. மகேஸ்வரலிங்கம்
குடும்பத்தினர்

---

கிழக்கு - யாழ். )

2-ம் லெப். ஸ்ராலின் (பாலசுந்தரம் உதயகுமார்-கப்பலுடையவர்வளவு கோயிலடி, வல்வெட்டித்துறை- யாழ்)

கரன் [மயில்வாகனம் உதயகுமார் - வேந்தனை, மாவிட்டபுரம் - யாழ். ]

தவா [பாவேல் ஜெயராஜ் - இல 57, 4-ம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை - யாழ் ]

யாழ் - பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

வெற்றி (இரத்தினம் அருள்மோகன் - மாவைக்கலட்டி, தெல்லிப்பழை - யாழ். )

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

ஜெயராஜ் [மகேந்திரம் ஜெயந்திரராஜா-மயிலியதனை - வல்வெட்டித்துறை - யாழ். ]

மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

இராமன் [மாப்பிள்ளை லெப்பைஅல்வின் - இறக்காமம் - அம்பாறை]

லெப். லக்கி (-அட்டைப்பள்ளம்-அம்பாறை)

கப்டன் ஆனந்த் (தங்கையா சுரேஸ்குமார் – இருதயபுரம மேற்கு-மட்டு)

லெப். கஜன் (-ஏறாவூர்-மட்டு)

ஜுனைற் (பூபாலப்பிள்ளை புவிராஜ்) களுவாஞ்சிக்குடி-மட்டு)

முரளி (கிருஷ்ணபிள்ளை முரளி-ஆரயம்பதி-மட்டு)

டிக்கினஸ் (கிருஷ்ணபிள்ளை தேவானந்தம்- திருப்பழுகாமம்-மட்டு)

பசிலன் (பக்தர் புஸ்பநாதன்- விவேகானந்தபுரம், வெல்லாவெளி- மட்டு)

உலகநாதன் (கனகசபை சுந்தரலிங்கம்-பண்டாரியாவெளி-கொக்கட்டிச்சோலை-மட்டு)

மொனரா (-லிங்கநாதன் முனைக்காடு கொக்கட்டிச்சோலை-மட்டு)

மொறின் (சாமித்தம்பி இராசதுரை கோயிலபோரதீவு-மட்டு)

மெடிசன் (தி. கேதீஸ்வரன் பெரியபோரதீவு -மட்டு)

சரவணன் (-ஆரையம்பதி-மட்டு)

ரங்கன் (-பதுளை)

எல்லாளன் (-நுவரெலியா-மலையகம்)

அம்பாறை -அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட குஞ்சனோடைப் பாலத்தடியைச்சேர்ந்த 4 தமிழர்கள் மற்றும் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்தியமுகாம் 4-ம் குடியிருப்புப் பகுதியைச்சேர்ந்த 2தமிழ் இளைஞர்கள்.

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா-செட்டிகுளம் முகாமிலிருந்து மடுநோககி வந்த சிறிலங்கா இராணுவததினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய,

அசோகன் (சதாசிவம் பரமகுரு முனைத்தீவு-பெரியபோரதீவு-மட்டு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

விக்கி (தியாகராசா உதயராசா -ஸ்கந்தபுரம்- கிளிநொச்சி)

வவுனியா-பிராமணாளங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

ஜிபகெலி (பாலசிங்கம் ஜெயராசலிங்கம் - வீரபத்திரர் கோயில் வீதி, ஏறாவூர்-மட்டு)

கப்டன் வீரன் (கணபதிப்பிள்ளை குமார் - அரிப்புத்துரை, முருங்கன்-மன்னார்)

லெப். நகுலேஸ் (காளிமுத்து கந்தசாமி– புளியங்குளம், அடம்பன்-மன்னார்)

ஜெயதாஸ் (தோ. ஜெயதாஸ்-சோசை-வங்காலை மன்னார்)

கீதன் (சத்தியா சூசைதாஸ் பிரபாகரன் -பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)

---

அச்சுவேலி வடக்கு,
வல்லை றோட்.
(5148)

உறவினர், நண்பர்கள்,
(பாடசாலை ஊழியர்கள்,
மாணவர்கள் அச்சுவேலி மகா. வி. )

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 05 — 1905

மறைவு: 26 — 06 — 1992

## அமரர் க. ஐயம்பிள்ளை

திதி: 16-06-1993

அன்பின் ஒளிவிளக்காய், குடும்பத்தின் நல்ல
தலைவனாய், எமக்கெல்லாம் நல்வழி
காட்டியாய் வாழ்ந்த எங்கள் தெய்வமே
உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றென்றும்
பிரார்த்திக்கிறோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[5143]

---

மடுத்தீன் (ஆறுமுகம் சித்திரவேல்-மாளிகைத்திடல்-மன்னார்)

வல்லவன் (கதிர்காமத்தம்பி ரவி-பனங்கட்டிக்கொட்டு மன்னார்.

லெப். கபில் (மகேஸ்வரலிங்கம் சசிகரன்- ஏழாலை மேற்கு, சுன்னாகம்-யாழ்)

லெப். செல்வம் (தர்மதாஸ் விமலதாஸ் - வெளிச்சவீடு ஒழுங்கை, முனை- பருத்தித்துறை - யாழ் )

லெப். ஜெராட் [சரவணைமுத்து சிறிஸ்கந்தராஜா-உசன், கொடிகாமம் - மிருசுவில்]

2-ம் லெப். ரவி [நடராசா கணேசன் - ஆலய வீதி காங்கேசன்துறை -யாழ். ]

2-ம்லெப். நிசாந்தன் [மாணிக்கராசா ஜெயராசா சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ் ]

விக்கினேஸ் [துரைசிங்கம் மனோகரன் - சிந்திப்பந்தல் - இளவாலை - யாழ். ]

முரளி [பா. வசந்தகுமார் - சுன்னாகம் - யாழ். ]

யூறி [ராஜசேகரன் டியூக் - இல 8, மத்தியமேற்கு வீதி, குருநகர் - யாழ். ]

இதே சமரின் போது விழுப்புண் அடைந்த போராளிகளைத் தூக்கி வரும் பணியின் போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

ஜெயதாஸ் [ ....... ]

வவுனியா-மன்னார் வீதி, 3ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6836)

Y.M.C.A

### சிந்தனைக்கு

ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.
ஒரு குழல் வாத்தியம் வாசித்தனர்.
இராணுவ உடுப்பை எனக்கு உடுத்தினர்.
பின்னர் என்னைக் கொன்றனர்.

— இர்வின் ஷா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-06-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சிங்கள சிப்பாய்களுக்கு ஒரு படிப்பினை

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் போர்க் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து நேற்றுடன் மூன்று நாட்கள் நிறைவுற்றுள்ளது. இவ் உண்ணாவிரதம் குறித்து அரசாங்கம் எதுவித அக்கறையோ, கரிசனையோ இதுவரை காட்டியதாகத் தெரியவில்லை. தமக்கும் அதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை போல் நடந்து கொள்கின்றது.

அரசாங்கத்தின் இவ் அக்கறையீனம் குறித்து காவலிலுள்ள பொலிஸாரும், பொலிஸாரின் பெற்றோரும்நன்கு உணர்ந்துள்ளது போல் தெரிகிறது. ஏனெனில் பொலிஸாரின் பெற்றோர்கள் தலைவர்பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்திலும், உண்ணாவிரதம் இருக்கும் பொலிஸார் 'புலிகளின் குரல்' வானொலிக்கு வழங்கிய பேட்டியும் இதனையே வெளிக்காட்டுபவையாக உள்ளன. இவை இரண்டிலும் பொலிஸாரின் உண்ணாவிரதம் குறித்து அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனை வலியுறுத்துமாப்போல் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கு எழுதிய கடிதமும் அமைந்துள்ளது. ''அரச அதிகாரிகள், உயர் மட்ட அரசியல் தலைவர்கள் ஆகியோருடன் பேச்சு நடத்தியும் சாதகமான பதில் எவையும் கிடைக்கவில்லை'' என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கமோ இக்கைதிகள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. ஆனால் இதில் எந்தளவிற்கு உண்மையுண்டு, கைதிகளின் விடுதலைக்கு இது எந்தளவிற்கு உதவும் என்பது சந்தேகமானதே. ஏனெனில் நாம் அறிந்த வரையில் கைதிகள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்த பின்னர் இதுவரை அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைஎதையும்மேற்கொண்டதாகத்தெரியவில்லை.

அதாவது, சிறிலங்கா அரசாங்கம் இராணுவச்...

## 'பட்ஜெட்'டை நிதியமைச்சரே சமர்ப்பிக்க தேவையில்லை

### சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை கட்டாயம் நிதி அமைச்சர்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதில்லை. எந்தவொரு அமைச்சரும் சமர்ப்பிக்கலாம் என்பதற்கு நிலையியற் கட்டளைகளில் விதியுண்டு என்று சபாநாயகர் எம். எச். முகம்மது பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான திருத்தச் சட்டம் மீதான விவாதத்தின்போது இதனை நிதியமைச்சரே சமர்ப்பிப்பதை விரும்புகிறேன். ஆனால் இதுவரை நிரந்தரமான நிதியமைச்சர் நியமிக்கப்படவில்லையே என்று சுதந்திரக்கட்சி எம். பி ஒருவர்சுட்டிக்காட்டியபோதே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

**கொழும்பில் மலையக வாலிபர்**

## கைதாவதைக்கண்டித்து வேலை நிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

கொழும்பு மாநகரிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் நாளாந்தம் சுற்றிவளைத்துக் கைது செய்யப்படுவதால் பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தொழில்களைக்கைவிட்டுபாதுகாப்புக்காகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் நிர்ப்பந்தம் உருவாகியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தக் கைது நடவடிக்கைகளால் மலையகத் தொழிற்சங்கங்கள் மத்தியில் அதிருப்தியும், சீற்றமும் ஏற்பட்டிருப்பதாகவும், இத்தகைய கைது நடவடிக்கைகளை எதிர்த்து மலையகத்தில் அடையாள வேலைநிறுத்தம்மேற்கொள்ள ஏற்பாடுகள்செய்யப்படுவதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

## பிக்குமார்களுக்கு ஒழுக்க நெறிக் கோவை

(கொழும்பு)

இலங்கையில் இருக்கும் தேரவாதபௌத்த பிக்குமார்களுக்கென ஒழுக்க நெறிக்கோவையொன்று வரையப்படவுள்ளது. வருங்காலத்தில் பிக்குமார் இந்த ஒழுக்க நெறிக் கோவைக்கு அமைவாக தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அமைச்சரவை உப குழு ஒன்றினால் இதற்கென சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளை பௌத்த சாசன அமைச்சின் ஆலோசனைச்சபை ஏற்றுக் கொண்டுள்ளது. சட்டவாக்கம் தயாரிக்கப்பட்ட பின்னர், ஒழுக்க நெறிக்கோவை சகல நிக்காயாக்களையும் சேர்ந்த பிக்குமார்களுக்குப் பொருத்தமுடையதாக விளங்கும்.

பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் நாட்டிலிருக்கும் சகல பௌத்த குருமாரினதும் பெயர்களைப் பதிவு செய்வார்.

## பிரேமா கொலையின் பின் வைபவங்களில் ஜே. ஆர்.

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவின மரணச் சடங்கின்போது சுகவீனம் எனக் காரணம் கூறி இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இறுதி ஊர்வலத்தின் பின்னர் கண்டி மலைத்தொடரில் காணப்பட்டார் என்று 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்குப்பின்னர்ஜே.ஆர். பொதுவைபவங்களில் கலந்து கொண்டு வருகிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா வாக்குச் சாவடி எதற்கும் சென்று வாக்களிக்கவில்லை எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### நம்பர்த்தகடு விநியோகம்

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று உப-அலுவலகங்களில் சைக்கிள்களுக்கான நம்பர் தகடுகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

### யாழ். மாவட்டத்திற்கான

# உணவுப் பொருள் மோசடி; புலனாய்வுதுறைவிசாரணை

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்களின் பாவனைக்கு என்று ஒதுக்கப்பட்ட உணவுப் பொருள்களில் 11 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருள்கள் காணாமல் போனமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தற்போது குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள் மர்மமான முறையில் காணாமல் போவது தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செய்துகொண்ட முறைப்பாட்டையடுத்து முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா முன்னாள் பிரதிப் பொலிஸ் அதிபர் ஏ. சி.லோரன்ஸ் தலைமையிலான விசேட புலனாய்வு பிரிவுக்கு இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும்படி பணித்திருந்தது தெரிந்ததே.

ஏ. சி. லோரன்ஸ் தலைமையிலான விசேட புலனாய்வு பிரிவு கலைக்கப்பட்டதை தொடர்ந்து இந்த விசாரணைகள் குற்றப் புலனாய்வு துறையிடமும், அதன் பொறுப்பாளரான அமரசேன ராஜபக்சவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினாலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவுப் பொருள்கள் அனுப்பும் வேலை மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதும், அமைச்சின் பொறுப்பில் இருக்கும் போதே உணவுப்பொருள்கள் காணாமல் போயின என்றும் கூறப்படுகின்றது. இப் பொருள்கள் கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர் காணாமல் போயிருந்தால் அதற்காக குறிப்பிட்ட கம்பனிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திற்கென அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் குறிப்பிட்ட தொகை பதினெட்டுத் தடவைகளில் வந்து சேரவில்லை என்றும் இவ்விதம் காணாமல் போன உணவுப் பொருள்களின் பெறுமதி சுமார் 11,325,000 ரூபாவாகஇருக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் கப்பலில் பொருள்களை ஏற்றும்போது, உரியபொருள்கள் ஏற்றப்படுகிறதா என்பதைக் கவனிக்க புதிய விதிமுறைகள் பயன்படுத்தப்படுவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

**சுதந்திர வர்த்தக வலையத்தின்**

## இயக்குநர்கள் தலைமறைவு நிறுவனங்கள் மூடப்பட்டன

[கொழும்பு]

கொழும்பு சுதந்திர வர்த்தக வலையத்திலுள்ள இரு தாய்வான் நிறுவனங்கள் அவற்றின் இயக்குநர்கள் திடீர் தலைமறைவை அடுத்து மூடப்பட்டன.

இதன் இயக்குநர்களாகிய கொரியர்கள் திடீரென எவருக்கும் சொல்லாதுவெளியேறிவிட்டதாகவும் இதனாலேயே இந் நிறுவனங்கள் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரி.கே. பாஸ்ரனர்ஸ், ரி. கே. பிரசிசன் ஆகிய இரும்பாணிகள் கருவிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களே இவ்வாறு மூடப்பட்டன.

இதனால் அதன் 909 ஊழியர்களும் வேலையிழந்துள்ளனர்.

## சமாதானக் குழுவினர் மட்டக்களப்புக்கு விஜயம்

(கொழும்பு)

சமாதானத்திற்கான பணிகளை மேற் கொள்ள வந்த சர்வதேச சர்வ மதக் குழுவினர் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புக்கு விஜயம்மேற்கொண்டிருப்பதாக இந்த அமைப்பினைச் சேர்ந்த செடெக் நிறுவன பணிப்பாளர் வண. பிதா. ஏக்மன் போர்ட் சந்தேசிய எனப்படும் பி. பி. சி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக் குழு வடக்கு. கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தெரிவித்திருக்கும் இவ் வேளையில் இவர்களது விஜயம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ் விஜயத்தின் மூலம் தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்களின் நேரடியான மன எண்ணத்தை அறியக்கூடியதாக இருக்கும் என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஜனசக்தி நம்பிக்கை நிதிய செயற்பாடு விரிவாக்கப்படும்

[கொழும்பு]

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்கும் ஜனசக்தி நம்பிக்கை நிதிய செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரித்த ரத்வத்த தெரிவித்தார். ஜனசக்தி நம்பிக்கை நிதியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட போஷாக்கு மற்றும் தொழிற்பயிற்சி செயற்பாடுகளும் இவ்வாறு விஸ்தரிக்கப்படும் என அவர் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களூடாக கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் சரித்த ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

### கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மே, யூன் ஆகிய இரு மாதங்களுக்கும் உரிய கொடுப்பனவுகள் தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகிறது. (22)

எவையும் மேற்கொள்ளவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனை வலியுறுத்துமாப்போல் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கு எழுதிய கடிதமும் அமைந்துள்ளது. ''அரச அதிகாரிகள், உயர் மட்ட அரசியல் தலைவர்கள் ஆகியோருடன் பேச்சு நடத்தியும் சாதகமான பதில் எவையும் கிடைக்கவில்லை'' என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கமோ இக்கைதிகள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. ஆனால் இதில் எந்தளவிற்கு உண்மையுண்டு, கைதிகளின் விடுதலைக்கு இது எந்தளவிற்கு உதவும் என்பது சந்தேகமானதே. ஏனெனில் நாம் அறிந்த வரையில் கைதிகள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்த பின்னர் இது வரை அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைஎதையும்மேற்கொண்டதாகத்தெரியவில்லை.

அதாவது, சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்திலும் பொலிஸிலும் சேவை செய்பவர்களை ஒரு கூலிப்படையாகவே கருதுகின்றது. அவர்கள் பெறும் சம்பளத்திற்காக அரசாங்கத்தை அவர்கள் பாதுகாக்க வேண்டும். ஆனால், அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்பதே இந்நிலைப்பாடாகும். இதை விடுத்து இராணுவத்திலோ, அன்றி பொலிஸ்படையிலோ சேர்த்துக் கொள்ளப்படும்போது கூறுவது போன்று அவர்கள் 'தேசிய வீரர்களோ' அன்றி 'நவீன துட்டகைமுனுக்களோ' அல்ல. இவை அதிகார வர்க்கம் தமது நலன்களைப் பாதுகாப்பதற்கென சிங்கள இளைஞர்களுக்குப் போதிக்கும் இன வெறியாகும்.

இதேவேளை, அரசஇராணுவத்தினர் இவ்வாறு கைவிடப்படுவது உலகில் ஒன்றும் புதுமையான தொன்றல்ல. இதுகுறித்து முன்னரே சுட்டிக்காட்டப்படாமலும் இல்லை. ஆனால், இராணுவத்திலோ அன்றி பொலிஸ்படையிலோ இளைஞர்கள் இணையும்போது இதனை அவர்கள் உணர்வதாகவோ, அன்றி தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் சிந்திப்பதாகவோ இல்லை. தமது கையில் கிடைக்கும் அதிகாரமும், கவர்ச்சிகரமான சம்பளமும், வேறுவகையிலான லாபங்களுமே அவர்களின் கண்முன்வருகின்றன. இந்நிலையில், தமது நடவடிக்கைகள் மற்றவர்களை எவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது என்பதைப் பற்றியும் அவர்கள் சிந்திப்பதில்லை.

ஆனால், போர்க்கைதிகளாகப் பிடிபடும்போதுதான் அவர்கள்தமது அவலத்தைப் புரிந்து கொள்கின்றார்கள். அரசுகள் தம்மைஒரு அற்பமாக மதிப்பதை விளங்கிக் கொள்கின்றார்கள். தமது மரணத்திலும்அரசாங்கம் தனது லாபநட்டக் கணக்கையே மதிப்பிடும் என்பதை அறிந்து கொள்கின்றார்கள். இதனால் தமது கடந்தகால நடவடிக்கைகளை இவர்கள்மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசிய நிலைக்கும்தள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்பிரச்சினையானது இன்று தனியாக யுத்தக்கைதிகளாகி, சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும், பொலிசாரினதும், அவர்கள் பெற்றோரினதும் மட்டுமானதல்ல. தற்பொழுது லட்சக்கணக்கில், சிறிலங்காவின் முப்படையிலும், பொலிஸ் படையிலும் மற்றும், ஊர்காவல்படையில் கடமை புரிபவர்களுக்கும். கிடைக்கப்பெற்றுள்ள ஒரு பாடமாகும். இதனை அவர்கள் புரிந்து கொள்வார்களா?

## பிரேமா கொலையின் பின் வைபவங்களில் ஜே. ஆர்.

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவின மரணச் சடங்கின்போது சுகவீனம் எனக் காரணம் கூறி இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இறுதி ஊர்வலத்தின் பின்னர் கண்டி மலைத்தொடரில் காணப்பட்டார் என்று 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்குப்பின்னர்ஜே.ஆர். பொதுவைபவங்களில் கலந்து கொண்டு வருகிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா வாக்குச் சாவடி எதற்கும் சென்று வாக்களிக்கவில்லை எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### நம்பர்த்தகடு விநியோகம்

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று உப-அலுவலகங்களில் சைக்கிள்களுக்கான நம்பர் தகடுகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. [25]

## 'இது எங்கள் தேசம்' படம் முல்லைத்தீவில் வெளியீடு

(முல்லைத்தீவு)

''இது எங்கள் தேசம்'' வீடியோப்பட வெளியீட்டு விழா கடந்த 5ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முல்லைமாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவினை முல்லை மாவட்ட விசேட தளபதி திரு அன்புமங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்ததுடன் இதன் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை மணலாறு கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.கலையரசனும் வெளியீட்டுரையை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இரா. தமிழன்பனும் நிகழ்த்தினர். இதன் மதிப்பீட்டுரையை முல்லை மாவட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு சரவணபவான், முல்லை மாவட்ட முன்னை நாள் கல்விப் பணிப்பாளர் திரு. வே. சுப்பிரமணியம் மற்றும் முல்லை மாவட்ட பிரதேசக்கல்விப் பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் இறுதியில் ''இது எங்கள் தேசம்'' வீடியோத் திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

இவ்வீடியோப் படத்தைப் பார்வையிட்ட தண்ணீரூற்றைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி இத் திரைப்படத்தைப் பார்வையிட்டபின் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக முல்லை மாவட்ட கலைஞர்களின் வளர்ச்சிக்காக முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.

''இது எங்கள் தேசம்'' வீடியோப் பட வெளியீட்டு வைபவத்தில் திரு. கரிகாலன் சிறப்புரை நிகழ்த்தினார்.

செவ்டக் திருவன பணிப்பாளர் வண. பிதா. ஏக்மன் போர்ட் சந்தேசிய எனப்படும் பி. பி. சி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்.

...மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் நேரடியான மன எண்ணத்தை அறியக் கூடியதாக இருக்கும் என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஜனசக்தி நம்பிக்கை நிதிய செயற்பாடு விரிவாக்கப்படும்

[கொழும்பு]

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்கும் ஜனசக்தி நம்பிக்கை நிதிய செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சரித்த ரத்வத்த தெரிவித்தார். ஜனசக்தி நம்பிக்கை நிதியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட போஷாக்கு மற்றும் தொழிற்பயிற்சி செயற்பாடுகளும் இவ்வாறு விஸ்தரிக்கப்படும் என அவர் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களூடாக கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் சரித்த ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

## போலி அம்பிசிலின்கள் குறித்து அவதானமாக இருக்கவும்

[யாழ்ப்பாணம்]

வழி வியாபாரிகள் மூலம் கொண்டுவரப்பட்ட அம்பிசிலின்குளிகைகள் போலியானவை என கண்டு பிடிக்கப்பட்டதாக வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

மேற்படி சங்கத்தினர் மேற்கொண்ட பரிசீலனையின் போது இவ்விடயம் கண்டு பிடிக்கப்பட்டது எனவும், எனவே இதுகுறித்து சகல ஆங்கில மருந்து வர்த்தகர்களும் அவதானமாக இருக்கும் படியும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

...உரியபொருள்களே ஏற்றப்படுகிறதா என்பதைக் கவனிக்க புதிய விதிமுறைகள் பயன்படுத்தப்படுவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

### கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மே, யூன் ஆகிய இரு மாதங்களுக்கும் உரிய கொடுப்பனவுகள் தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகிறது. (22)

### சமுகமளிக்க பணிப்பு

கொழும்பிலுள்ள வைத்தியசாலைகளில் விசேட சிகிச்சை பெறுவதற்காக வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு தமது காரியாலயத்தில் சமுகம் அளிக்கும்படி யாழ். பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [21]

## சந்தை விலை விபரம் (14-06-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 30.50 | 27.30 | 30.65 | 27.30 | 29.65 | 28.50 | 28.65 | 30.65 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 13.00 | 13.15 | 13.65 | 13.00 | 14.00 | 13.30 | 13.50 |
| 03. | சீனி | ,, | 58.00 | 42.00 | — | 59.30 | 60.00 | 60.00 | — | 61.65 |
| 04. | கத்தரி | ,, | 16.33 | 31.00 | 13.00 | 21.30 | 20.65 | 20.00 | 24.00 | 20.00 |
| 05. | வெண்டி | ,, | 17.00 | 34.30 | 16.00 | 21.30 | 19.30 | 25.00 | 33.30 | 40.00 |
| 06. | பாகல் | ,, | 20.65 | 46.30 | 25.30 | 46.65 | 40.00 | 36.65 | 30.65 | 37.50 |
| 07. | புடோல் | ,, | 14.00 | 26.67 | 10.00 | 20.00 | 15.00 | 16.00 | 14.65 | 19.30 |
| 08. | பயற்றங்காய் | ,, | 22.67 | 45.00 | 19.30 | 21.00 | 24.00 | 28.30 | 23.30 | 20.00 |
| 09. | தக்காளி | ,, | 80.00 | 85.00 | — | — | 60.00 | — | — | — |
| 10. | வாழைக்காய் | ,, | 29.00 | 30.30 | 28.30 | 34.30 | 35.00 | 33.30 | 31.65 | 29.00 |
| 11. | பீற்றூட் | ,, | 21.00 | 33.30 | 20.00 | 40.00 | 20.00 | 25.00 | 36.65 | 20.00 |
| 12. | தேங்காய் | ஒன்று | 18.00 | 17.30 | 15.65 | 15.80 | 15.80 | 14.00 | 15.00 | 10.50 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 110.00 | 94.30 | 113.30 | 145.65 | 126.65 | 100.00 | 103.30 | 105.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 110.00 | 151.65 | 133.30 | 63.30 | 125.00 | 80.00 | 113.30 | 80.00 |
| 15. | வெங்காயம் | ,, | 13.65 | 17.00 | 14.00 | 17.25 | 22.80 | 25.00 | 21.50 | 15.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 31.00 | 85.30 | 35.00 | 36.00 | 30.00 | 45.00 | 35.00 | 30.00 |
| 17. | இறால் | ,, | 120.00 | 115.00 | 90.00 | 100.00 | 93.30 | — | 120.00 | 75.00 |
| 18. | பெரியமீன் | ,, | 200.00 | 170.00 | 150.00 | 250.00 | 121.65 | — | 250.00 | — |
| 19. | சிறியமீன் | ,, | 80.00 | 100.00 | 80.00 | 100.00 | 100.00 | — | 100.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 09.00 | 09.65 | 08.40 | 08.25 | 08.00 | 07.50 | 08.80 | 06.80 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

## உணவு முத்திரைக்கு பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இன்று முதல் உணவு முத்திரைக்குப் பின்வரும் பொருள்கள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது:

பயறு கிலோ 27 ரூபாவாகவும், றவை கிலோ 20 ரூபாவாகவும், கடலை கிலோ 47 ரூபாவாகவும், மைசூர் பருப்பு கிலோ 55 ரூபாவாகவும், பூடு கிலோ 70 ரூபாவாகவும், தேயிலை கிலோ 74 ரூபாவாகவும் மற்றும் சவர்க்கார வகைகளான சன்லைட் 9 ரூபாவாகவும், லக்ஸ் 11 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது சீனி வழமை போல் கிலோ ரூபா 27 50 க்கு விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

சமூக விஞ்ஞான மன்றத்தினால் இன்று பி.ப. 3.00 மணிக்கு ''இலங்கையின் வங்கியியலில் தாராள நிதிக்கொள்கையின்கீழ் ஏற்பட்ட மாற்றங்களும் செயற்பாடுகளும்'' என்ற தலைப்பில் இலங்கை வங்கியின் சிரேஷ்ட உத்தியோகத்தர் திரு. வே. ஐயம்பெருமான் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார். இக் கருத்தரங்கு பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

## சிற்றூர்தி சேவை

(பருத்தித்துறை)

பயணிகள் நலன் கருதி நாளை வியாழன் முதல் வல்வெட்டித்துறை-யாழ். சேவையில் 751 பாதையில் நான்கு சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையத் தலைவர் அறிவித்துள்ளார்.

## விண்ணப்பப் படிவம் விநியோகம்

தற்போது அரசினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் விவசாய அறிமுக அட்டையினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செய்து வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக கோப்பாய், நல்லூர், பருத்தித்துறை வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான விவசாய அறிமுக அட்டை விண்ணப்பப் படிவங்கள் மேற்குறிப்பிட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழக வட்டச் செயலகங்களில் இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வட்டப் பிரதேச விவசாயிகளும் அந்தந்த வட்டங்களிலேயே தமக்குரிய படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். ஏனைய வட்ட விவசாயிகளுக்கான விண்ணப்பப் படிவ விநியோகம் தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## தொடர்புகொள்க

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ் மாவட்டத்தில் வசிக்கும் மக்களில் மாதாந்த பொதுசன உதவிக் கொடுப்பனவைப் பெறும் தகுதியில் இருந்தும் இதுவரை இக்கொடுப்பனவைப் பெறாதவர்கள் தீவக மக்கள் நலன் காக்கும் கழகச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இத்துடன் தொடர்ந்து பெற்றுவந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளவர்களும் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பிரிவின் உதவியுடன் நடாத்தப்படும் யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வித் திட்ட கல்வி உத்தியோகத்தர்களுக்கான தொடர் பயிற்சி நெறி இன்றுகாலை 9 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (22)


உ

சிவமயம்

கோண்டாவில் வடக்கு,

அருள்மிகு சிவபூதராயசுவாமி தேவஸ்தானம்

### வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

எதிர்வரும் ஸ்ரீமுக வருஷம் ஆனித்திங்கள் 3-ம் நாள் (17-06-93-ம்) திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி 15-ம் நாள் 29-03-93 ம் திகதி வைரவர் மடையுடன் பூர்த்தியாகும். இத்திருவிழாக் காலங்களில் 24-06-93 சப்பர விழாவும், 25-06-93 தேர்த்திருவிழாவும், 26-06-93 தீர்த்தத் திருவிழாவும், 28-06-93 பூங்காவனத் திருவிழாவும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

தினசரி இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரை பெரிய புராணம் என்னும் பொருள்பற்றி அகில இலங்கை கம்பன் கழக சொற்பொழிவாளர் உயர்திருஆறு-திருமுருகன் B.A. (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) அவர்கள் சொற்பெருக்காற்றுவார்கள். சைவப்பெருமக்கள் அனைவரும் திரண்டு வந்து சிவபூதராய பெருமானின் திருவருளைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன்


## சிசுக்களின் சடலங்கள் காவல்துறையினரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் வடக்கு தோட்டத்திலும் நீர்வேலிப்பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றிலும் இருந்து இரு சிசுக்களின் உடல்களை தமிழீழ காவல்துறையினர் நேற்று முன்தினம் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைத்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் தோட்டம் ஒன்றினுள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் நாயினால் இழுத்து வரப்பட்ட அழுகிய நிலையில் இருந்த பெண் சிசுவின் சடலம் ஒன்றைக் கண்ட பொது மக்கள் அதுபற்றி சுன்னாகம் காவல்துறையில் செய்த புகாரை அடுத்து ஸ்தலத்திற்கு சென்ற காவல்துறையினர் அச்சிசுவின் சடலத்தை மீட்டனர். இதே வேளை நீர்வேலி தோட்டம் ஒன்றிலும் சிசுவின் சடலம் ஒன்று காணப்பட்டது இரண்டு சிசுக்களின் சடலங்களும் விசாரணைக்காக யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது [சி]

## பொலிஸ்

புலிகள் மேற்கொள்ளும் ஒரு தூண்டுதலே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

டக்ளஸ் தேவானந்தாவின் இப்பேச்சானது உண்ணாவிரதம் மேற்கொள்ளும் பொலிசாரின் போராட்டத்தின் காரணத்தை வெளியுலகில் மழுங்கடிக்கும் நோக்கம் கொண்டதோடு, புலிகளைக் களங்கப்படுத்தும் நோக்கம் கொண்டதாகும்.

## வீரவணக்க கூட்டம்

6 ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வடமராட்சிக் கோட்டத்தின் கரவெட்டி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8 00 மணிக்கு புலோலி கிழக்கு, பூவாக்கரைப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும்.

## நடக்கக்கூடிய

நாம் இறந்து விடுவோமோ என்பது தெரியாது என்றும் பண்டார மேலும் தெரிவித்தார். இதேசமயம் இன்னும் நான்கு தினங்கள் மட்டுமே நீர் அருந்துவோம் என்றும் இதன் பின்னரும் எமது விடுதலை குறித்து ஆக்கபூர்வமான பதில் சரியான இடத்திலிருந்து வராவிட்டால் அதன்பின் நீர் அருந்தாமல் இருப்போம் என்றும் போர் கைதியான மற்றுமோர் பொலிஸார் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9882

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3339, 41-8449, 24-5818, 26-3118, 42-1547
26-6842, 26-7540, 26-6745, 28-9917, 26-1741
26-7217, 26-8497, 27-0991, 27-7740, 41-8467
24-1040, 24-2496, 41-6784, 24-6439, 26-7286
24-3063, 24-6646, 26-0672, 26-1221, 24-5041
42-1623, 26-4376, 26-5882, 26-3146, 42-2432
41-9876, 28-9259, 27-5822.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1494, 26-4429, 27-6524, 40-4760, 28-8037
24-9489, 41-9746, 28-1110, 42-6862, 41-5417
24-1983, 22-8835, 27-7653, 27-9779, 41-5015
28-5862, 41-7563, 26-6983, 26-2941, 26-6366
26-1253, 24-5623, 24-4303, 27-8999.


## இதய அஞ்சலி

அமரராகிவிட்ட யாழ். பல்கலைக்கழக ஜிம்னாஸ்டிக் அணி பயிற்றுநரும், பிரபல விளையாட்டு வீரரும், சிறந்த மத்தியஸ்தருமாகிய திரு. பேதுறுப்பிள்ளை கபிரியேற்பிள்ளை அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.



## ஈராண்டு நினைவுகள்



தாயின் மடியில்
18 - 01 - 1973

தாயக மடியில்
16 - 06 - 1991

### 2-ம் லெப். யூறி

[இராசசேகரம் டியூக்மன்]

எல்லை காக்கும் பெரும் போரில்
எம்மைப் பிரிந்த பெரும் மகனே
உன்னை எண்ணி இரு ஆண்டாய்
ஏங்கிக் கண்ணீர் பெருகுதடா.

இல. 8, மத்திய மேற்கு வீதி, குருநகர் — யாழ். (சி/6845)

பெற்றோர், குடும்பத்தினர்.



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்:
27-12-1972

★

தமிழீழ மண்ணில்:
16-06-1990

### வீரவேங்கை தினேஷ்

(யோகநாதன் பிரபாகரன்)

மூன்றாண்டு அதற்குள்
முடிந்து போயிற்றா?
உன் பூமுகம் பார்த்து
மூன்றாண்டுகள் அதற்குள்
முடிந்து போயிற்றா?
நினைவுகளில் உன்நினைவு
பசுமையாகவே.

உயிலங்குளம்,
துணுக்காய்.

அம்மா, அப்பா, தங்கை,
தம்பி, அம்மம்மா.
உறவினர்கள், நண்பர்கள்.

(5120)

எதிர்வரும் ஸ்ரீமுக வருஷம் ஆனித்திங்கள் 3-ம் நாள் (17-06-93-ம்) திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி 15-ம் நாள் 29-03-93 ம் திகதி வைரவர் மடையுடன் பூர்த்தியாகும். இத்திருவிழாக் காலங்களில் 24-06-93 சப்பர விழாவும், 25-06-93 தேர்த்திருவிழாவும், 26-06-93 தீர்த்தத் திருவிழாவும், 28-06-93 பூங்காவனத் திருவிழாவும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

தினசரி இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரை பெரிய புராணம் என்னும் பொருள்பற்றி அகில இலங்கை கம்பன் கழக சொற்பொழிவாளர் உயர்திருஆறு-திருமுருகன் B A. (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) அவர்கள் சொற்பெருக்காற்றுவார்கள். சைவப்பெருமக்கள் அனைவரும் திரண்டு வந்து சிவபூதராய பெருமானின் திருவருளைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

அருள்மிகு சிவபூதராய தேவஸ்தான விழா உபயகாரர்கள், பரிபாலன சபையினர், ஊர்மக்கள்.

விளம்பர அன்பளிப்பு:

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6835)

## Computer Programming in BASIC LANGUAGE

**4 MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: **19-06-1993**

8-30 மணி

Lectures By: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ 400/- மட்டுமே.

C. I. M. A., I. A. B., LOTUS 1-2-3
SHORT - HAND & TYPING
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## School of Business Administration

(Pioneers in Computer Education)

16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-6840)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

காக்கும் கழகச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இத்துடன் தொடர்ந்து பெற்றுவந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளவர்களும் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பிரிவின் உதவியுடன் நடாத்தப்படும் யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வித் திட்ட கல்வி உத்தியோகத்தர்களுக்கான தொடர் பயிற்சி நெறி இன்றுகாலை 9 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (22)

வெளியில்

பாரிய சத்தம் ஒன்று கேட்டது. அப்போது மரங்கள் முறியும் சத்தங்கள் கேட்டன. தேங்காய்களும், மட்டைகளும் பதுங்குகுழிமீது விழுந்தன.

சுமார் 30நிமிடநேர அனர்த்தத்தின் பின் விமானங்கள் திரும்பிச் சென்றுவிட்டன. நாம் பதுங்கு குழியை விட்டு வெளியே வந்து பார்த்தபோது மாதா கோவில் சேதமுற்றிருந்ததைக் கண்டோம்'' என அவர் தனது அனுபவத்தை எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார். (86)

எழுதுமட்டுவாளில்

யில் காணப்படுகிறது. எங்கும் ஒரே மண் குவியலாக உள்ளது.

குண்டுவீச்சு நடைபெற்றபோது வீதியில் விறகு ஏற்றி வந்தவர்கள் சைக்கிள்களை வீதியில் போட்டுவிட்டு வயல் வெளிகளிலும் மதகுகளிலும் பாதுகாப்பு தேடி ஓடினர். இவர்களில் சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது. நேற்றைய தாக்குதலில் உயிர்ச்சேதங்கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டன. (86)

24-1040, 24-2496, 41-6784, 24-6439, 26-7286
24-3063, 24-6646, 26-0672, 26-1221, 24-5041
42-1623, 26-4376, 26-5882, 26-3146, 42-2432
41-9876, 28-9259, 27-5822.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1494, 26-4429, 27-6524, 40-4760, 28-8037
24-9489, 41-9746, 28-1110, 42-6862, 41-5417
24-1983, 22-8835, 27-7653, 27-9779, 41-5015
28-5862, 41-7563, 26-6983, 26-2941, 26-6366
26-1253, 24-5623, 24-4303, 27-8999.

## இதய அஞ்சலி

அமரராகிவிட்ட யாழ். பல்கலைக்கழக ஜிம்னாஸ்டிக் அணி பயிற்றுநரும், பிரபல விளையாட்டு வீரரும், சிறந்த மத்தியஸ்தருமாகிய திரு. பேதுறுப்பிள்ளை கபிரியேற்பிள்ளை அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தவர்க்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்,
விளையாட்டு அவை
யாழ். பல்கலைக்கழகம்.

[5151]

## யாழ்நகர் ஸ்ரீதர் திரையரங்கில் 3-வது வெற்றி வாரமாகவும் சாவகச்சேரி தெய்வேந்திரா திரையரங்கிலும் "இது எங்கள் தேசம்"

(சி/6846)

## திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 2 ஆம் நாள் (16 6-1993) புதன்கிழமை (இன்று) காலை 6-10 மணிமுதல் 8-00 மணிவரை வரும் சுப முகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

★ **விதுரா ஆடை அகம்** ★

எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படவிருப்பதால் மேற்படி திறப்பு விழாவிற்கு தாங்களும் வருகை தந்து இவ்விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்,

இல. 34, நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ந. தணிகாசலம்,
த. குலசிங்கம்.

(5153)



16-06-1990

## வீரவேங்கை தினேஷ்

(யோகநாதன் பிரபாகரன்)

மூன்றாண்டு அதற்குள்
முடிந்து போயிற்றா?
உன் பூமுகம் பார்த்து
மூன்றாண்டுகள் அதற்குள்
முடிந்து போயிற்றா?
நினைவுகளில் உன்நினைவு
பசுமையாகவே.

உயிலங்குளம்,
துணுக்காய்.

அம்மா, அப்பா, தங்கை,
தம்பி, அம்மம்மா.
உறவினர்கள், நண்பர்கள்.

(5120)

## மரண அறிவித்தல்



பேதுருப்பிள்ளை
கபிரியேல்பிள்ளை / செல்வரெட்னம்
(முன்னாள் கடற்படை வீரர்)

யாழ். பல்கலைக்கழக உடற்பயிற்சி அணி பயிற்றுநர் (ஜிம்னாஸ்ரிக்), கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட பயிற்சியாளர்)

மலர்வு: **1936-2-02** உதிர்வு: **1993-6-14**

நாவாந்துறையைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை கபிரியேல்பிள்ளை (14-06-93) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார். இவர் மேரி கிளாராவின் அன்புக் கணவரும், றோஸ்மேரி, மைஸ்மேரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறிஸ்ரியின் (இலங்கை வங்கி, யாழ்.) அன்பு மாமனாரும், கிறிஸ்சாந்தா, றொசாந்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 16-06-93 புதன் (இன்று) மாலை 4-00 மணிக்கு சென். நீக்கலஸ் தேவாலயத்தில் இடம் பெறும் திருப்பலியின் பின்பு, நல்லடக்கத்திற்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

23, நாவலர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கிறிஸ்ரியன்
(மருமகன்)
(மைத்துனர், பெறாமக்கள்)
மருமக்கள்)

(5149)